தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

கிழமை இதழ்

தொகுதி-3 | தி. பி. 2016 | ஆடவை 9 | (23-6-1985) | 65 காசுகள் | இதழ் எண் : 59 | பகுதி 21-22

நடுவணரசின் மாதிரிப் பள்ளிகள், வடநாட்டினரின் வல்லாண்மையை என்றென்றும் நிலைநாட்டும் மூளை வெளுப்பு நிலையங்கள்!

ஆங்கிலம், இந்தி - பயிற்றுமொழிகள் என்றால், தமிழ்மொழியை எவ்வழியாக மாணவர்களுக்குப் புகட்டுவது?

தில்லியரசு, இந்திக்கும் - சமசுகிருதத்திற்கும் கொடுக்கும் முதன்மையை, மாநில மொழிகளுக்குத் தராதது ஏன்?

மதம், சட்டம், கல்வி-மூன்றும் அடிமைப்படுத்தும் கருவிகளா?

தமிழினம் மிக எச்சரிக்கையாக இல்லாவிடில், எதிர்காலத்தில், அதன் அச்சு, அடையாளங்கள் கூட இல்லாமற் போய்விடும்!

நடுவணரசு அண்மையில் மாவட்டந்தோறும் அமைக்கவிருக்கும். 'மாதிரிப் பள்ளிகள்' (Model Schools) வடநாட்டுப் பார்ப்பனீய-முதலாளிய வல்லாண்மையரசை, என்றென்றும் நிலை நிறுத்தப் போகும் மூளை வெளுப்பு நிலையங்களாகச் செயல்பட இருக்கின்றன. நேரு குடும்ப ஆட்சியின் தொடர்ந்த வலிமைவாய்ந்த பிறங்கடையாக இராசீவ் காந்தி மிகத் திறமையாகத் திட்டமிட்டு, இந்தியாவில் தேசிய இனங்களின் காலூன்றல்களை அகற்றி வருகிறார்.

மத ஆளுமை வழியாக, இந்தியாவில் வேரூன்றிய மூட நம்பிக்கைகளையும் பார்ப்பனீயத் தன்மைகளையும் நிலை நிறுத்தவும், கருப்புச் சட்டங்கள் வழியாகப் பிற தேசிய இனவெழுச்சிகளை முறியடிக்கவும், தேசியக் கல்வித் திட்டத்தின் வழியாக, இந்தியாவில் ஒரு போலித்தனமான தேசிய ஒற்றுமையையும், ஒருமைப் பாட்டையும் வளர்த்தெடுக்கவும் அவர் செய்யும் முயற்சிகள் மிகக் கரவானவையாகவும், வஞ்சகமானவையாகவும் உருவெடுத்து வருகின்றன. வறுமையொழிப்பு, தீண்டாமை ஒழிப்பு, குமுகாயச் சமநிலை ஆகியவற்றில் கவனம் செலுத்துவதாகப் பேசி, அவ் வகைகளில் ஓர் இம்மியளவு முயற்சியும் செய்யாமல், விரைவு விரைவாக, அவர் இந்தியத் தேசியத்தை எந்த வகையான அடித்தளமும் இல்லாமல் கட்ட முனைந்துள்ளார்.

மாதிரிப் பள்ளிகள் என்னும் வகையில், நடுவணரசு செய்யவிருக்கும் முயற்சிகள், இந்தியை மிக நயமாகப் புகுத்துகின்ற செயற்பாடுகளே ஆகும். இப்பள்ளிகளில், ஆங்கிலமும்-இந்தியுமே பாட மொழிகளாக இருக்கும். அவர்கள் பயிற்றவிருக்கும் பாடங்களும்,இந்திய ஒற்றுமையையும்,ஒருமைப்பாட்டையும் வளர்த்தெடுக்கும் முறையிலேயே இருக்கும் என்று தெரிகிறது. இந்திய ஒற்றுமையும், ஒருமைப்பாடும் என்றால், அவற்றில் முதலாளியமும்-பார்ப்பனீயமுமே வேரோடிக் கிடக்கும் என்று சொல்லத் தேவையில்லை.

அண்மையில், திருப்பதியில் உள்ள 'கேந்திரிய சம்சுக்கிருத வித்தியா பீடத்தில்' பேசிய நடுவண் கல்வி அமைச்சர் கே. சி. பந்த் அவர்கள், சமசுக்கிருதமே இந்தியப் பண்பாட்டுக்கும், கல்வியமைப்புக்கும் அரணாக விளங்குகிறது என்று பேசியுள்ளார். எனவே, நேரிடையாகவோ, மறைமுகமாகவோ, நடுவணரசுக்குச் சமசுக்கிருதத்தையும், இந்தியையும் வளர்த்தெடுப்பதே முகாமையான கொள்கை என்று தெரிகிறது. ஆங்கிலத்தை இந்தியாவிள் இந்தியைப் பரப்பும் வரையில், ஒரு துணைக்கருவியாகக்கொண்டு. பின் படிப்படியாக அதை விலக்கிவிட்டு, முழுவதுமே இந்தி என்னும் அளவில் வலுப்படுத்திவிட வேண்டும் என்பதுதான் அவர்களின் இந்தியத் தேசியக் கொள்கையாக இன்றுவரை இருந்து வருகிறது.

இந்தி பயிற்று மொழியாக வளர்ந்துவிட்டால், பின்னர் மாநில மொழிகளுக்கு அத்துணை முகாமை இருக்காது என்பது நடுவணரசின் கருத்தாகும். இதைத்திட்டமிட்டுச் செயலாற்றுவதே அதன் கல்வித் துறை, செய்தி ஒலி, ஒளி பரப்புத்துறை, தேசிய மொழித்துறை, பொருள்துறை முதலிய துறைகளின் முகாமைப் பணியாக இருக்கிறது. இதன் அடிப்படையில் அறிவியல், மருத்துவஇயல், பொறியியல் துறைகளில்கூட இந்தி வலிந்து புகுத்தப்படுகிறது.

இம் முயற்சிகள் பற்றி, இப்பொழுது நடைபெற்று வரும் சட்டமன்றக் கூட்டத் தொடரின், தொடக்க நடவடிக்கைகளில், தமிழகக் கல்வியமைச்சர் பட்டும் படாததும் போல் நடுவணரசைக் கண்டித்துள்ளார். 'இந்தி பயிற்று மொழியாகக் கொண்டுவரப்படுவதைத் தமிழக அரசு எதிர்க்கும். எனவே, தமிழக அரசின சார்பாக இதைக் கண்டிக்கிறேன்' என்று நடுவணரசு மனமும், தம் கையும் வலிக்காமல் மெதுவாகத் தம் வாய் வழியான எதிர்ப்பைத் தெரிவித்துள்ளார். ஆனால் இவையெல்லாம் ஒரு கண்துடைப்பு முயற்சியே என்பது, தமிழக அரசுக்கும் தெரியும்; தமிழக அரசின் முதுகைச் சொரிந்து கொடுக்கும் நடுவணரசுக்கும் தெரியும்! **'நான அடிப்பதுபோல் அடிக்கிறேன; நீ அழுவது போல் அழு'** என்னும் நாடகக் காட்சிகளே இவை.

ஆங்கிலம், இந்தி—இவை இரண்டுதாம் பயிற்றுமொழிகள் என்றால், மாநில அரசின் தாய்மொழிக் கல்விக்கு எங்கேஇடம்?எதன் வழியாகத்தமிழ்மொழியை மாணவர்களுக்குப் புகட்ட முடியும்? ஏற்கனவே தமிழக அரசின் ஆட்சிமொழிச் சட்டமும் செயல்களும் நொண்டியடித்த நிலையிலேயே உள்ளன. இனி மாதிரிப் பள்ளிகள் வந்துவிட்டால், அந்த ஆட்சி மொழிச் சட்டச் செயற்பாடுகள் படிப்படியாக வலுக்குறைந்து விடும் என்பதைச் சொல்லவும் வேண்டுமா? தில்லியரசு, இந்திக்கும், சமசுக்கிருதத்திற்கும் தரும் முதன்மையை. மாநில மொழிகளுக்குத் தராதது ஏன்? மாநில மொழிகள் முடப்படவும், குருடாகவும் வேண்டும் என்பதே அதன் உள் நோக்கம்.

மதம், சட்டம், கல்வி—ஆகிய மூன்று துறைகளிலும் தன் வலிந்த கால்களையும், கைகளையும் நடுவணரசு ஊன்றிக் கொண்டு, மாநில அரசுகளை அந்நிலைகளில் செயலிழக்கச் செய்து வருகின்ற கொடுமையும் கரவும் நிறைந்த வல்லாண்மை முயற்சிகள், இந்திய நாட்டின் எதிர்காலத்தை எங்கு கொண்டு போய் நிறுத்துமோ, இப்பொழுது கூறுவதற்கில்லை.

தொடர் — 12

ஐந்து நாடுகளில் முப்பது நாள்கள்!

என் முதல் ஐரோப்பிய சுற்றுச் செலவு

நம் நாட்டைப் பொறுத்தவரையில் ஒரு பெண்ணுக்குரிய ஒழுக்கமென்றால் அவள் திருமணமாகாதவளாக இருந்தால், எந்த ஆணையுமே ஏறெடுத்துப் பார்க்கக் கூடாதென்றும், பழகக் கூடாதென்றும், பேசக் கூடாதென்றும் கட்டுப்படுத்தப் பெறுவதும், அவள் திருமணமானவளாக இருந்தால், தன் கணவனைத்தவிர, வேறு எந்த நோக்கத்துடனும் அவள் பிற ஆண்களுடன் முன் கூறியபடி தொடர்பு கொள்ளக்கூடாதென்று சட்டுப்படுத்தப் பெறுவதும் மூகாமையான கோட்பாடுகளாக உள்ளன. இந் நிலையைத்தான் பெண்களுக்குரிய தலையாய கற்பு நிலையாக நம்மிடம் உள்ள அற நூல்களும், பழக்கவழக்கங்களும், குடும்ப மாபுகளும் வலியுறுத்துகின்றன. அறிவியல் வளர்ச்சி மிக்கோங்கிய இக் காலத்துக்கு-மாந்தப்பிரிவுகள் தவிர்க்கப்பெற்று, அனைத்து மக்களும் ஒன்று என்று எண்ணும், இன்றைய வளர்ந்த மக்கள் மனவியல் வளர்ச்சிக்கு, இந் நடைமுறை பொறுத்த முள்ளதா என்று நன்கு மனம்விட்டு, நடுநிலையுணர்வுடன் எண்ணிப் பாருங்கள்!

கீழே, நம் செய்மைக்கால அண்மைக்கால இலக்கியங்களிலிருந்து இரண்டு எடுத்துக் காட்டுகளைத் தருகிறேன். அதில் திருமணமான ஆண், பெண் கற்பு நிலைகள் இரண்டு நிகழ்ச்சிகளினடிப்படையில் கூறப்பெற்றிருக்கின்றன. இவை இந்தக் கால, வளர்ச்சியடைந்த மனவுணர்வுக்குப்பொருந்துகின்றனவா என்று எண்ணிப் பாருங்கள். அல்லது இம் மனவுணர்வு தேவையா என்று ஆய்ந்து பாருங்கள்.

மாணிக்கவாசகர் எழுதிய திருச்சிற்றம்பலக் கோவையில் உள்ள 244-ஆம் பாடல் இது:

மீண்டார் எனஉவந் தேன்,கண்டு,
நும்மை! இம் மேதகவே,
பூண்டார் இருவர்முன் போயினரே!
புலியூர் எனை நின்று
ஆண்டான் அருவரை ஆளியன்
ஞானைக்கண் டேன்; அயலே
தூண்டா விளக்கனை யாய்,என்னை
யோ,அன்னை சொல்லியதே!

ஓர் இளைஞனும், இளைஞையும் ஒருவரை ஒருவர் விரும்பினா; காதலித்தனா; கடிமணம் புரிந்து கொண்டனர். இதனை அவ்வூரார் விரும்பாமையால், வேறு ஊருக்குப்போய் அங்கு வாழ விரும்பினர். எனவே, மக்கள் போக்குவரத்துக் குறைந்த ஓர் ஒற்றையடிப் பாதையில் அயலூர்ச் செலவு மேற்கொண்டு சென்று கொண்டிருந்தனர்.

இவர்கள் சென்று கொண்டிருந்த அதேவழியில், எதிர்நிலையில், மூதியவள் ஒருத்தி நேர்ப்படுகிறாள். அவள், தன் மகளையும் அவளை இவ்வாறுக உடன் போக்கில் அழைத்துச் சென்ற காதலனையும் தேடிக் கொண்டு வருகிறவள். அம் மூதியவள் இவர்களைக் கண்டவுடன், "தம்பி, உங்கள் இருவரையும் நெடுந்தொலைவிலிருந்து பார்த்தவுடன், என் மகள் தான் அவள் காதலனுடன் திரும்பி வருகிறாளோ என்று எண்ணினேன். ஆனால், நீங்கள் இருவரும் அருகில் வந்தவுடன், நீங்கள் வேறு இருவர் என்று உணர்ந்து கொண்டேன். ஆனால், உங்களை ஒன்று கேட்க வேண்டும். நீங்கள் இப் பக்கமாக வந்துகொண்டிருக்கையில், உங்களை எதிர்நோக்கியவாறுஉங்களைப் போலவே இருவர் போனதைக் கண்டீர்களோ?" என்று கேட்கிறாள்.

அதற்கு அவ் விளைஞன், "அன்னையீர், நாங்கள் இருவரும் வந்து கொண்டிருக்கும்பொழுது, புலியூரில் இருந்து, என்னை ஆட்கொண்டானே, அவன் வாழும் அரிய மலையில் உள்ள யானை போன்ற ஒருவன் எதிர் வந்து சென்றதைக் கண்டேன். ஆனால், அவன் பக்கத்தில் ஒரு பெண் சென்றாளா என்பதை, இதோ என்னோடு வருகின்ற இவளைத்தான் கேட்க வேண்டும்" என்று கூறிவிட்டுத் தன் காதலியைப் பார்த்துத் "தூண்டா விளக்கனையாய், அன்னை கேட்கின்றாறு. நான் பார்த்த ஒருவன் பக்கலில் ஒருத்தி போவதை நீ பார்த்தாயா?" என்று கேட்பதாக இப் பாடல் அமைந்துள்ளது.

இப் பாடலிலுள்ள நயம், பண்பாடு, கற்பனை, சொலலாட்சி முதலிய இலக்கியச் சிறப்பியல் கூறுகள் இருக்கட்டும். அவை நமக்கு மகிழ்ச்சி யூட்டுபவை தாம். ஆனால், நாம் இங்குப் பார்க்கவேண்டுவது இதிலுள்ள கருத்தையே! அஃதென்ன?

ஓர் இளைஞன் ஒரு பெண்ணுடன் போய்க்கொண்டிருக்கின்றான். அதேபோல் வேறோர் இளைஞனும், இன்னொரு பெண்ணுடன் வந்து கொண்டிருக்கின்றான். போய்க் கொண்டிருந்த இளைஞன், வந்து கொண்டிருந்த இருவரில், இளைஞனை மட்டுமே பார்க்கிறான். அவன் பக்கத்தில் வருகிற இளம் பெண்ணைப் பார்க்கவில்லை. அதேபோல், அவனுடன் இணைந்து போய்க் கொண்டிருந்த பெண்ணும், வந்துகொண்டிருந்த இளைஞனுடன் இருந்தபெண்ணை மட்டுந்தான் பார்த்திருக்க வேண்டும் என்றும், அவள் அந்த இளைஞனைப் பார்த்திருக்க இயலாது என்றும் இவன் கருதுகின்றான். இந்த நிலையில் அவன் சொல்வது என்ன?

'பெண்ணே, நம் முன்னர் வந்து கொண்டிருந்த இளைஞனை மட்டும் நான் பார்த்தேன். ஆனால் அவன் பக்கலில் இருந்த பெண்ணை நீ பார்த்தையோ' என்கிறான்.

இக் கருத்தில் என்ன தெரிகிறது? திருமணமான ஒருவன் வேறு ஒரு பெண்ணைப் பார்க்கவும் கூடாதென்றும், அதேபோல திருமணமான ஒரு பெண், வேறு ஓர் ஆணையும் பார்க்கக் கூடாதென்றும், அதுதான் ஒழுக்கம், பண்பு என்றும் வலியுறுத்தப் பெறுகிறது.

எண்ணிப் பாருங்கள்! இஃது, இக்கால அறிவியல், மனவியல் வளர்ச்சி நிலைகளுக்குப் பொருந்தி வருமா, அல்லது, இப்படி இருப்பதுதான் ஒழுக்கம் பண்பு என்பது மாந்தவியல் கோட்பாட்டிற்குப் பொருந்துவதாகுமா? நடுநிலையோடு சொல்லுங்கள். இதுதான் ஒழுக்கமா? பண்பா? இப்படிக் கட்டுப்பாடு செய்வதால் யாருக்கு என்ன பயன்? இவ்

(தொடர்ச்சி 3-ஆம் பக்கம்)

உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தின் மாநிலச் செயற்குழுக் கூட்டம்!

12-5-1985 - இல் ஈரோட்டில் கூடிய கூட்டத்தின் நிகழ்ச்சிச் சுருக்கம்! (தொடர்ச்சி-3)

புலவர் கலியபெருமாள் பேசி முடித்தவுடன் தமிழக மக்கள் விடுதலைக் கூட்டணியின் இன்னோர் உறுப்பாண்மைத் தலைவரும், இந்தியப் பொதுவுடைமைக் கட்சி (நடுவண் சீரமைப்புக் குழு) யின் தமிழகப் பிரிவின் முகாமைத் தலைவரும், 'மார்க்சியம் இன்று' இதழாசிரியரும், சிறந்த மார்க்சிய அறிஞரும்,சிறப்பு அழைப்பாளருமாகிய தோழர் எசு. என. நாகராசன் அவர்கள் உரையாற்றத் தொடங்கினார். அவர்கள் உரையாற்றுகையில், 'விடுதலை என்பது யாருக்கு இயலும்; யாருக்கு இயலாது; என்பதில் வேறுபாடு இல்லை. எல்லாருக்குமே முயன்றால் இயலுகின்ற குறிக்கோளே அது. இயலாதென்பதே இல்லை. ஒரு காலத்தில், இவ்வுலக உருண்டையில் பெரும்பாலான நாடுகளைக் கைப்பற்றி, அவர்களது ஆட்சியில் சூரியனே மறையாது என்று கூறப்பட்ட ஆங்கிலப் பேரரசு ஒருநாள் மறையும் என்று மார்க்சு சொன்னார். அது பொய்யாகவில்லை. முதல் உலகப்போருக்குப் பின்தான் உருசியா தோன்றியது. 2-வது உலகப்போருக்குப்பின்னர் தாம் சீனம் தோன்றியது; பின் வியட்நாம் பிறந்தது. அணுக்கருவிகள், வல்லரசியம் (ஏகாதிபத்தியம்) என்பவை யெல்லாம் ஒருவகையில் தாள் (காகிதப்) புலிகளே! உண்மையான விடுதலைப் போராட்டம் கட்டாயம் வெல்லும். அவ்வாறு வெல்லுவதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. முதலில் விடுதலை என்பது உண்மையானது. இரண்டாவது நயன்மை (நியாயம்) ஆனது. அமெரிக்கா வாயிலிலுள்ள கியூபா விடுதலை பெற்றது. இவ்வகையால் 4·50 கோடி மக்கள் உள்ள தமிழ்நாடும் விடுதலை பெறமுடியுமா என்று சிலர் ஐயுறுகின்றனர். கட்டாயம் முடியும். ஆனால் இவ் விடுதலை உணர்வுக்கு உண்மையான முட்டுக்கட்டை யார் என்று பார்க்க வேண்டும். மார்க்சியம் பேசிக் கொண்டு, பொதுவுடைமை என்று கூறிக் கொண்டு இருப்பவர்கள்தாம், தமிழக விடுதலைக்கு உண்மையாக முட்டுக்கட்டை இடுகிறார்கள்.

தமிழக விடுதலையை மீட்டெடுக்கத் தோற்றுவித்துள்ள தமிழக மக்கள் விடுதலைக் கூட்டணி தன குறிக்கோளில், கொள்கையில் வெற்றிபெற்றே தீரும். தமிழகத்தில் மட்டுமன்று பிற தேசிய இனங்கள் வாழும் பிற மாநிலங்களிலும் கூட இவ் விடுதலைப் போராட்டம் வென்றே தீரும்.

விடுதலைப் போராட்டத்திற்குத் தாழ்த்தப்பட்டவர்களையும் பிற்படுத்தப் பட்டவர்களையும் ஒன்றிணைக்க வேண்டும். இந் முயற்சி வெற்றி பெற்றால் நம் போராட்டம் எளிது.

இங்குப் பேசிய சிலர், இப்பொழுது நடைபெற்று வரும் தமிழீழப் போராட்டத்திற்கு, நாம் நடத்தப் போகும் தமிழக விடுதலைப் போராட்டம் தடையாக இருக்குமா என்று ஐயத்தை எழுப்பினார்கள். நான் சொல்லுகிறேன். தமிழக விடுதலையில் அக்கறை கொண்டவர்கள் மட்டுமே தமிழீழத்தின் விடுதலையை ஆதரிப்பவர்கள ஆகிறார்கள். தமிழீழ விடுதலையை விரும்புபவர்களும் தமிழக விடுதலைக்கு ஆதரவு தந்தே ஆகவேண்டும். தமிழக மக்கள் விடுதலை என்பதும தமிழீழ மக்கள் விடுதலை என்பதும் வேறு வேறு அல்ல. ஒன்றுதான். விடுதலை என்பது அனைவர்க்குமே பொது. அந்த உணர்ச்சி உள்ளவர்களுக்கு எந்த நாட்டு விடுதலையும் ஒன்றுதான். அல்லாக்கால் அஃது உண்மையான விடுதலை உணர்ச்சியாக இருக்க முடியாது, எப்படியிருப்பினும் தமிழக விடுதலை உணர்ச்சிதான் தமிழீழ விடுதலை உணர்ச்சிக்குத் துணைநிற்க முடியும். தேசிய இனப் போராட்டங்கள் தில்லியரசை வலிவிழக்கச்செய்யும். என்றுமே இத்தகைய போராட்டங்களுக்கு ஏழை எளிய மக்கள்தாம் துணையாக இருக்கமுடியும். அந்த நிலைகளை உருவாக்குவதற்கு அனைவரும் துணையாக இருக்க வேண்டும்' என்று கூறி முடித்தார். —(தொடரும்)

கோட்டூரில் தமிழீழ விடுதலை விளக்கப் பொதுக்கூட்டம்!

3-6-1985, திங்கட்கிழமையன்று இரவு 7 மணியளவில் மதுரை மாவட்டம் கோட்டூரில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் தமிழீழ விடுதலை விளக்கப் பொதுக்கூட்டம் வெகு சிறப்பாக நடைபெற்றது.

கலைஞர் பிறந்தநாள் விழா, தமிழீழ உரிமை எழுச்சி நாளாகக் கொண்டாடப்பெற்றது. தமிழீழச் சிக்கலுக்குத் தீர்வுகாண வேண்டி நடுவணரசு அலுவலகங்கள் முன் மறியல் செய்து சிறை சென்ற தொண்டர்களுக்குப் பாராட்டும் வரவேற்பும் வழங்கப்பட்டன.

கூட்டத்திற்குத் தி.மு.க. உழவர் அணித் தலைவர் திரு. வ. இல. சின்னச்சாமி (கருத்தப்பாண்டியன்) தலைமையேற்றார்.

வந்திருந்தோர் யாவரையும் தி.மு.க. இளைஞர் அணித் தலைவர் திரு. செல்லப்பா மகாலிங்கம், க.இ; வரவேற்றார்.

தமிழ்நாடு ஆசிரியர் கூட்டணியின் தேனி ஒன்றியத் தலைவரும், சனதாக் கட்சி உறுப்பினரும் ஆகிய திரு. அ. குணசேகரன் அவர்கள் சிறை சென்ற வீரர்களைப் பாராட்டி உரை நிகழ்த்தினர்.

மறியலில் தலைமையேற்று நடத்திச் சென்றவரும் மேலூர் ஊராட்சி மன்றத் தலைவரும், கோட்டூர் தி.மு.க. தலைவரும் ஆகிய திரு. சு.பெ வேலுச்சாமி அவர்கள், அளிக்கப்பட்ட பாராட்டினையும் வரவேற்பினையும் ஏற்றுக் கொண்டு, நன்றி தெரிவித்து உரையாற்றினார்.

இறுதியாக, உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தின் துணைப் பொதுச்செயலர் திரு. தென்னவன்கோ அவர்கள் 'தமிழீழ விடுதலை ஏன்?' என்னும் தலைப்பில் சிறப்புரையாற்றினார். தம் சிறப்புரையில்,

'இலங்கைத் தமிழர்களில் யாழ்ப்பாணம், திருகோண மலைப்பகுதிகளில் வாழ்வோர் தொன்று தொட்டு வாழ்ந்து வருவோர்.—வங்காள, ஒரிசாப் பகுதியிலிருந்து இலங்கையில் குடியேறிய சிங்களரே வந்தேறிகள். மலையகத் தமிழர் யாவரும் மதுரை, முகவை, நெல்லை சேலம் மாவட்டங்களிலிருந்து கூலிகளாகக் குடியேறியவர், சிங்கள இனவெறியரும், இனக்கொலைக் கொடியன் செயவர்த்தனவும் தமிழர்களை வேறுபாடின்றிக் கொலை செய்து வருகின்றனர். சிங்களப்பிடியிலிருந்து தம்மை விடுவித்துக்கொள்ள இழந்த உரிமையை மீட்டுக் கொள்ளவே இளைஞர்கள் கருவியேந்திப் போராடுகின்றனர். இவ் வினை விடுதலை உரிமைப்போரை உலக நாடுகள் ஏற்றுக் கொள்ள வேண்டும். தாய்த் தமிழக அரசும், தமிழகத்தை உள்ளடக்கிய இந்தியப் பேரரசும் இதில் ஈடுபட்டுப் போர் முடிக்க வேண்டும். இவ்விருவரும் ஈடுபடாத பொழுது, இனவுணர்வுமிக்க தன்மானத் தமிழர்கள் ஆர்வமும் அக்கறையும் கொண்டு போராடுவோர்க்குத் தங்கள் ஆதரவைக் காட்ட வேண்டும்' என்று அரசுகள், மக்கள், ஆதரவாளர் இவர்களின் நிலைகளைத் தெளிவுபடுத்தி, ஏறத்தாழ 1-30 மணி நேரம், சின்னஞ்சிறிய சிற்றூர் மக்கள் மனங்கொள்ளுமாறு நள்ளிரவு வரை உரையாற்றி முடித்தார்.

மக்கள் கடுங்காற்றிலும் சாரலிலும் எழாது அமர்ந்திருந்து கருத்து விளக்கம் கேட்டுப் பயனடைந்தனர். தி.மு.க. இளைஞர் அணிச்செயலர் திரு.ச.இராமமூர்த்தி நன்றி நவிலத் தமிழீழ விடுதலை விளக்கப் பொதுக்கூட்டம் இனிதே முடிவடைந்தது.

— நெடியோன்.

தமிழீழ விடுதலைக்கு ஆதரவு அளியுங்கள்!

ஓய்ந்திடல் இல்லை, என் உள்ளமும்
உணர்வும் உயிர்ச்செறிவும்!
தேய்ந்திடல் இல்லை, என் விரல்களும்
தாளும்! திரிந்தலைந்து
சாய்ந்திடல் இல்லை, என் உடலும்;
எனவே சலிப்பிலனாய்
மாய்ந்திடல் வரையும் உழைப்பேன்,
உரைப்பேன், மக்களுக்கே!

தமிழ்நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தொகுதி-3 இதழ் எண்: 59 (23-6-1985) பகுதி 21-22

இலங்கையில் பகைச் செயல் நிறுத்தம்!

செயவர்த்தனே — இராசீவ் பேச்சுரையின் முடிவில், சூன் மாதம் 18-ஆம் பக்கல் முதல், இலங்கையில், தமிழீழ விடுதலைப் போராளிகளும், அரசும், **மூன்று மாதக் காலத்திற்குப் போர் நிறுத்த ஒப்பந்தம் செய்துகொள்வதெனவும், அப்பொழுதுதான் தாங்கள் எடுதத முடிவுப்படி அரசியல் முறையில், இரண்டு தரப்பினரும் பேச்சுரை நடத்தித் தமிழீழச் சிக்கலுக்குத் தீர்வு காணமுடியும் என்றும் தீர்மானித்தனர்**, ஆனால், இதுவும் கடந்த கால முயற்சிகளைப்போல செயலுக்குப் பொருந்தி வராத, வெறும் காலத்தைக் கடத்தும் கண் துடைப்பு முயற்சியே என்பதற்குப் பேச்சுரை நடந்து கொண்டிருக்கும் பொழுதே, இலங்கையின் படைத்துறை யாழ்ப்பாணப் பகுதிகளில், தமிழர்களைச் சுட்டுக் கொல்லும் வன்முறை நிகழ்ச்சிகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்ததே சரியான சான்றாகும்

பேச்சுரைத் தீர்மானத்திற்குப் பின்னும் இலங்கைக்கொடுமைகள் முன்னினும் அதிக அளவில் நாள்தோறும் நீடித்துக்கொண்டிருந்தன. இதற்கிடையில் தாங்கள் மேற்கொள்ள விருக்கும், போர் நிறுத்த ஒப்பந்தத்தைப்பற்றி, அதன் தொடர்பான பலரும் பலவாறான கருத்துகளைப் பல கோணங்களில் வெளிப்படுத்திக் கொண்டிருந்தனர். இலங்கைப் பாதுகாப்பு அமைச்சரான அதுலத் முதலியே, இலங்கைப் படையுடன் சேர்ந்து, தாமே முன்னின்று தமிழர்களைச் சுட்டுக் கொன்று குவித்து வந்தார். பேச்சுரைக்கு யாரும் மதிப்பு வைத்ததாகவே கருதமுடியாமல் இருந்தது.

அதுவும் இரண்டு தலைவர்களின் பேச்சின் முடிவில் வெளியிடப்பெற்ற அறிக்கையில், போர் நிறுத்தத்திற்கு எந்த வகையான கட்டுப்பாட்டையும், எவரும் வெளிப்படுத்தவில்லை. அத்துடன், மொத்தமுள்ள முகாமையான ஆறு விடுதலைப் போராளர் குழுவில், ஐந்து குழுக்களே போர் நிறுத்தத்திற்கு ஆதரவு தெரிவிப்பதாகவும், விடுதலைப் புலிகள் இயக்கம் போர் நிறுத்தத்தை எதிர்த்து வருவதாகவும் கூறி, விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் போர் நிறுத்தத்தை ஏற்காவிடில், இந்திய அரசுக்கு அவர்கள் விடை கூறவேண்டி யிருக்கும் என்று வேறு அச்சுறுத்தப்பட்டது.

இனி, பேச்சுரையில் அமைவான அரசியல் தீர்வுக்குப் போர் நிறுத்த ஒப்பந்தமே சரியானது என்று முதலில் கருத்துக்கூறிய செயவர்த்தனே, சூன் மாத இடையில் போர் நிறுத்த அறிவிப்பு நாளுக்கு இரண்டு நாள்களுக்கு முன், கொழும்புவில் ஒரு செய்தியாளர் கூட்டத்தில் போர் நிறுத்தம் ஏற்பட்டுக் கூட்டுப் பேச்சு தொடங்கப் படுவதற்கு முன்னர், **விடுதலைப் போராட்டக் காரர்கள் முதலில் 2 கட்டுப்பாடுகளை ஏற்றாகவேண்டும் என்றும், அவற்றுள் ஒன்று, அவர்கள் அனைத்துப் போராட்டக் கருவிகளையும் கீழே போடவேண்டுமென்றும். இரண்டு, அவர்கள் தமிழீழக் கோரிக்கையைக் கைவிடவேண்டுமென்றும் கூறினர்.**

ஆனால், சூன் 18-ஆம் நாளன்று, போர் நிறுத்தம் பற்றிப் பேசிய இலங்கைப் பாதுகாப்பு அமைச்சர் **'இது பகைச்செயல் நிறுத்தம் மட்டுமே; போர் நிறுத்தம் அன்று"** என்று, அவர்கள் எடுக்கப் போகும் நடவடிக்கைக்கு விளக்கம் அளித்துள்ளார்.

இவ்வாறு ஆளுக்கொரு பேச்சும், நாளுக்கொரு கொடுமையாகவும் நடந்துவரும், தமிழின அழிப்பு முயற்சிகளை முன்வைத்து, எடுக்கப்பட்ட ஒப்பந்தம் இலங்கை அரசு எல்லா நிலைகளிலும் முன் இருந்த இடத்திலேயே இருந்துகொண்டிருக்கிறது என்பதையே நேரடியாகவும், மறைமுகமாகவும் நமக்குப் புலப்படுத்திக் காட்டுகிறது.

எஃது எப்படியாயினும், எந்த முயற்சியானாலும், மனத் தூய்மையுடனும் உண்மையுடனும் இரு தரப்பினரும் செயல்பட்டாலொழிய வெற்றி காண்பது கடினம் என்பதையே இன்று வரை நாம் அனைத்து நிலையிலும் உணர்ந்தும், உணர்த்தியும் வருகிறோம். இந்நிலையில் விடுதலைப் போராளிகளும், இலங்கை அரசின் எத்தகைய பசப்புச் சொற்களிலும் அல்லது செயல்களிலும் ஒரேயடியாக நம்பிக்கை வைத்துவிட வேண்டாம் என்றும் கேட்டுக்கொள்கிறோம். **ஏனெனில், உண்மையல்லாத சாவான ஒப்பந்தங்கள், போரை விடக் கொடுமை நிறைந்தவையும், கோழைமை வாய்ந்தவையுமே ஆகும் என்பதை மறந்துவிட வேண்டாம்.** 0

நம் இயக்கத்தின் உண்மை நிலைகள்-8

- கழக முதல்வர் -

நம் தமிழ்நாட்டு இயக்கங்கள் சில வெறும் விளம்பரத்தாலேயே உயிர் வாழ்ந்து கொண்டிருப்பதை அனைவருமே உணர்ந்துவிட முடியாது. விளம்பரம் இல்லாமல் அவற்றால் நிலை பெற இயலாது. மக்களுக்கு அன்றாடம் தங்கள் இயக்கத்தைப்பற்றி ஏதேனும் ஒரு செய்தி வெளிவந்து கொண்டேயிருக்க வேண்டும் என்பதற்காக, ஏதேனும் ஓர் அறிக்கை, அல்லது ஏதேனும் ஒரு தேவையற்ற செயல் இருந்து கொண்டே இருக்கும். அதில் மிகக் கவனமாக நம் தலைவர்கள் இருக்கிறார்கள். மக்கள் அறிவு பெற வேண்டும் என்பதோ, உண்மையை உணர்ந்து கொள்ளவேண்டும் என்பதோ, உணர்வு பெறவேண்டும் என்பதோ நம் இனத்திற்கு ஒரு விடிவு ஏற்பட வேண்டும் என்பதோ அவர்களுக்குக் கவலையில்லை. இன்னுஞ் சொன்னால் அவர்கள் (மக்கள்) என்றும் விழிப்படைந்து விடக்கூடாது என்பதுதான் அவர்களின் கவலையெல்லாம். எந்தவகையிலும் அவர்கள் மக்களைப்பற்றிக் கவலைப்படுவதாகவே நம்மால் நம்ப முடியவில்லை. நாம் இதைப் பொறாமையாலோ, வெறுப்பாலோ கூறவில்லை. ஆராக் கவலையாலேயே குறிப்பிடுகின்றோம். அவர்கள் விரும்புவதெல்லாம் மக்கள் தங்களை விட்டு விலகிப் போய்விடக்கூடாது என்பதுதான்; தங்களை நம்பாமல் இருந்துவிடக் கூடாது என்பதுதான்! அவர்கள் எப்பொழுதும் தங்களை எதற்கும் எதிர்பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும் என்பதற்காக, எவ்வாறும் நடந்துகொள்ள அணியமாக இருக்கிறார்கள். ஒரு வியப்பான நிகழ்ச்சியைச்சொன்னால், இதுபற்றிய நம் தலைவரின் நடைமுறை நன்கு விளங்கும்.

45: நம் இயக்கங்களில் முகாமையானது ஒன்று. சில ஆண்டுகளுக்கு முன் ஒருமுறை, கடலூரில் அதன் பொதுக்கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் முகாமையான தலைவர்கள் சிலர் பேசவிருந்தார்கள். பலவகையில் விளம்பரங்கள் செய்தும் கூட்டம், குறிப்பிட்ட நேரத்தில், மிகக் குறைவாகவே வந்திருந்தது. ஆனால், அதற்குள் குறிப்பிட்ட முகாமைத் தலைவர் ஊருக்கு வந்து சேர்ந்திருந்தார். ஏழு மணி ஆகியும் போதிய கூட்டம் வராததால், கூட்டத்தை ஏற்பாடு செய்தவர்கள், ஒலிபெருக்கியில், 'தலைவர் அண்டை ஊர் ஒன்றில் ஒரு நிகழ்ச்சியை முடித்துவிட்டுப் புறப்பட்டுக் கொண்டிருக்கிறார். அவர் இன்னும் கொஞ்ச நேரத்தில் வந்துவிடுவார். அதுவரை மக்கள் அமைதியாக இருக்கவேண்டும்' என்று தெரிவித்தார்கள். பிறகு 10 நிமையத்துக்கு ஒருமுறை, ஒலிபெருக்கி 'தலைவர் புறப்பட்டு விட்டார்; இதோ வந்துகொண்டிருக்கிறார்; இதோ, இப்பொழுதுதான் தொலைபேசியில் செய்தி வந்தது; இந்த ஊர் வரை வந்துவிட்டார்; அந்த ஊர் வந்துவிட்டார்' என்றபடியெல்லாம் அறிவித்துக் கொண்டேயிருந்தது. உண்மை என்னவென்றால், கூறப்பெற்ற தலைவர் முன்னரே வந்து, ஓர் இயங்கியில் சிலருடன் அமர்ந்துகொண்டு, கூட்டம் நடைபெற்ற திடல் வெளியைச் சுற்றிச்சுற்றி வந்துகொண்டிருந்தார். இப்படிச் செய்வதில் அவர்கள் எதிர்பார்த்த விளைவுகள் இரண்டு. ஒன்று கூட்டம் நிறைவாகச் சேர்ந்த பின்னர், தலைவர் மிகவும் பரபரப்பாக உள் நுழையவேண்டும் என்பது. இரண்டு, கூடியுள்ள மக்கள் அவர் வரமாட்டாரா, வரமாட்டாரா என்று ஆவலுடன் எதிர்பார்த்திருக்கவேண்டும் என்பது. இவ்வாறு பொதுமக்களிடம் பல உத்திகளையும் கையாண்டு தங்களுக்கு ஏற்பட்ட சாய்கால நிலை நிறுத்திக் கொள்வதில் நம் தலைவர்கள் தலை சிறந்தவர்கள்.

46: தலைவர்கள் வெளியூர் சென்றால் ஒரு சுவரொட்டி; உள்ளூர் வந்தால் ஒரு சுவரொட்டி; சிறைக்குப்போனால்; விடுதலை ஆனால்; அதற்குள் விடுதலை செய்யப்பட வேண்டும் என்று; பிறந்த நாளைக்கு; இப்படி எழுந்தால் சுவரொட்டி; நடந்தால் சுவரொட்டி என்னும் நடைமுறையெல்லாம், பொதுமக்களைக் கவருவதற்காகவே அச்சடித்து ஒட்டப்படுகின்றன என்பது பலருக்குத் தெரியாது. அந்தோ, பொது மக்கள்! அவை மக்கள் ஆர்வத்தின் வெளிப்பாடு என்றே நம்பிக் கிடக்கிறார்கள்! என்ன செய்வது, அறுக்கிறவனை நம்புகிற ஆடுகளாக அவர்கள் அறியாமையில் மூழ்கிக் கிடக்கின்ற வரை இத்தகைய ஏமாற்றுகளும், புன்செயல்களும் இருக்கத்தானே செய்யும்!

47: விளம்பர முறை என்பது இக்காலத்தில் வேண்டப்படாத ஒரு துறையாக இல்லைதான். விளம்பரம் செய்வது தவறு என்றோ, தேவையற்றது என்றோ நாம் சொல்ல முன்வரவில்லை. அஃது ஒருவகையில் தேவையும் கூட. ஆனால், எண்ணிப்பாருங்கள். நம் இயக்கங்கள் தங்களை விளம்பரப்படுத்திக் கொள்வதைவிட, வேறு உருப்படியான செயல்களில் ஈடுபடுவது மிகுதியாக உள்ளதா? செயல்கள் 10 விழுக்காடு என்றால், விளம்பரங்கள் 90 விழுக்காடாக உள்ளது. நம் மக்கள் இன வளர்ச்சிக்கும், மன வளர்ச்சிக்கும், நாட்டு மேம்பாட்டிற்கும் இந்த நிலை பயன் தருமா? செய்வதை இயல்பாக வெளிப்படுத்திக் கொள்வதில் தவறில்லை. ஆனால், அதை இந்த அளவில் - பொதுமக்களை ஏமாற்றும் அளவில் - செய்ய வேண்டுமா? இவற்றை நம் இயக்கங்கள் செய்கின்றன என்றால், அவற்றுக்கு, அவற்றிடம் உள்ள பணப் பெருக்கமே முகாமையான காரணமாகப் போகிறது. ஆக, பணம் இருந்தால், இங்குள்ள நிலையில் பூனையை யானையாக்கிவிட முடிகிறது. இந்த நிலை மேலும் மேலும் தங்களைப் பெரும் அளவில் வளர்த்துக் கொள்ளப் பயன்படுமே தவிர, வேறு உருப்படியான மேம்பாட்டுக்குப் பயன் பட்டுவிட முடியாது என்பதை உறுதியாகச் சொல்லலாம்.

48: தமிழர்களுக்குப் பயன் தரக்கூடிய அல்லது தமிழ் மொழிக்குப் பெருமையும், உயர்வும் தரக்கூடிய செயல்களை இவ்வியக்கங்கள் செய்கின்றனவா என்று எண்ணிப்பார்த்தால், விரல்களை விடத் தான் வேண்டியிருக்கும். இவை போதுமா? இவ் வியக்கங்களிடம் உள்ள பொருளளவையும், செயலளவையும் எண்ணிப் பார்க்கின்றபொழுது, இவை செயலாற்றுவதாக பீற்றிக் கொள்ளும் அல்லது விளம்பரப் படுத்திக் கொள்ளும் நிலைகள், ஒன்றுமேயில்லை என்று சொல்லும்படி சிறுத்துப் போய் விடுகின்றன. தமிழினத்தின் நிலை நாளுக்கு நாள், மேலுக்கு மேல் தாழ்ந்து தான் போய்க் கொண்டுள்ளதே தவிர, இவ் வியக்கங்களின் முயற்சிகளால், அந்த நிலையில் ஏதேனும் மாற்றம் ஏற்பட்டுள்ளது என்று எவரேனும் முன்வந்து கூற முடியுமா?

49: இவற்றையெல்லாம், ஏன், இங்கு, இவ்வளவு வெளிப்படையாகச் சொல்லுகின்றோம் என்றால்; இனிமேலாகிலும், நம் மக்களில் பொதுநலப் போக்கும், இன நல மேம்பாடும் குறித்து எண்ணுகின்ற அறிவாளர்கள் இவற்றை மனம்விட்டு சிந்தித்துப் பார்க்கவேண்டும் என்பதற்காகவும், அவர்களுள் சிலரேனும், தங்கள் வாழ்க்கையில் பெரும்பகுதி முயற்சிகளை, முடிந்தால் வாழக்கை முழுவதையுமே, நம் மொழி, இன, நல மேம்பாடுகளில் ஈடுபடுத்திக் கொண்டு, நாட்டு நலன் கருதவேண்டுவது கட்டாயம் என்பதற்காகவுமே என்று கூறிக்கொள்ள விரும்புகின்றோம். இனி, நாம் தொடங்கியுள்ள உ.த.மு.க. பற்றிச் சில உள்முக நிலைகளைப் பற்றிக் கவனிப்போம்.

(தொடரும்)

(2-ஆம் பக்கத் தொடர்ச்சி)

வகையில்உயிரியல் வளர்ச்சிக்கூறு தடைப்படாதா? வெறுப்பு விருப்பின்றி ஆய்ந்து சொல்லுங்கள்.

இந்த உணர்வு மீமிசை மாந்தக் கோட்பாடு என்பதற்குத்துளியும் பொருந்தாதது பார்ப்பதே ஒழுக்கக்குறைவு — பண்புக்குறைவு என்றால், இஃது உயிரியக்கத்திற்கிட்ட தடையாகாதா? இவ்வாறு எல்லா ஆண்களும், அல்லது பெண்களுந்தாம் ஒழுகமுடியுமா? அவ்வாறானால், இக்கருத்துப்படி அனைவருமே ஒழுக்கமிலாதவர் என்றோ, பண்பில்லாதவர் என்றோ தானே சொல்லப் பெறுதல் வேண்டும். இஃது இயற்கையின் இயங்கியலாகுமா? பண்பு என்பதில், உயிர்ச்சிதைவு இருப்பது எப்படி இயற்கை வளர்ச்சிக்குப் பொருந்துவதாகும்? இதுபற்றி இன்னோர் எடுத்துக்காட்டையும் பார்த்துவிட்டுப் பின்னர் விளக்கமாகக் கூறுவோம்.

(தொடரும்)

அன்பர்கள் கவனிக்க...

பொறுப்பாசிரியர் அவர்களை வந்து காணவும், கண்டு பேசவும் விரும்பும் அன்பர்கள், கட்டாயம் காரி, ஞாயிறு ஆகிய நாள்களில், மாலையில் 5 மணிக்குமேல், எழுதி இசைவு பெற்று, கேட்டுக்கொண்டு வருமாறு வேண்டிக் கொள்கிறோம்.

அமைச்சர்.

தேசிய இன விடுதலைக்குப் போராடுவோம்!

உ. த. மு. க. உறவு மடல் :

எண்ணிப் பாருங்கள்!

தோழமை நெஞ்சினரே,

நாம் நம்காலிலேயே நிற்போம்-ஆயினும் 'சார்பு' வளர்ச்சிதோறும் தேவைப்படவே செய்யும். எதற் கெடுத்தாலும் பிறர் கையைத் தேடுவது—உரிமை இழப்பில் போய்முடியும்.

புரட்சி, எழுச்சியை விரும்பும் நாம் இரண்டகச் சிந்தனையை எதிர்த்தல் வேண்டும். ஒரு கட்சிக்கு வாலாகத் திரிதல் கூடாது. முன்னேறும் ஆற்றலைச் சார்ந்திருத்தல் வேண்டும். வரலாற்றின் திருப்புமுனையைச் சார்ந்திருத்தல் வேண்டும். அரை மனம் கூடாது. ஊசலாட்டம் கூடாது என்பதை இலெனின் (போன்ற) அறிஞரிடமிருந்து கற்றறிந்திருக்கிறோம்!

ஆனாலும், நாம் உரிமை வேட்கை குறைந்தவர்களாக வாழ்ந்து கெடுகிறோம். எண்ணத்திலும் ஏற்றமில்லை. நாம் பாராட்டுவதிலும், எதிர்ப்பதிலும் அறிவுணர்ச்சியைக் கைவிட்டு விடுகிறோம்.

எடுத்துக் காட்டாக, 28-6-84-இல் பரமக்குடியில் நடந்த ஒரு கூட்டத்தின் போக்கைப் பார்ப்போம்.

கூட்டம் சோவியத்து–இந்திய நட்புறவுக் கழகச் சார்புடையது-சோவியத்து நாடு - படிப்பவர் வட்டக் கருத்தைக் கேட்க ஏற்பாடான நிகழ்ச்சி. அதில் பலர் பேசினர். சோவியத்தின் தமிழ் ஆர்வலர் 'செம்பியன்' நினைவு கூறப்பட்டார்.

அதில், ஆதிகோபால் வழக்குரைஞர் பேசினார்.

"சாதி மோதல், மதப்பூசல், தேசிய இனச்சிக்கல் இவற்றிற்கெல்லாம் சோவியத்து எப்படித் தீர்வு கண்டது? தீர்வு காண்பது எங்ஙனம்? என்ற வினாக்களுக்கு விளக்கம் தரும் படைப்புகள் சோவியத்து இதழ்களில் வருதல் வேண்டும்" என்றார்.

பிறர் மொழிநடை பற்றியும் பேசினர்; எளிமை பற்றியும் கூறினர். சோவியத்து அறிவியல் வளர்ச்சி கொடிகட்டிப் பறக்கிறது! அதன் படைப்புகளில் செய்தி அழுத்தம் இருக்கும். படிப்பதே கனமாகத் தோன்றும். எனவே, பேசியவர்கள் எல்லாம் 'எளிமை' பற்றியே அடிக்கடி பேசினார்கள்! ஏன்?

மூளையைச் சலவையாக்கிக் கொண்டவர்களின் எண்ணம் இப்படி வெளிப்படுவதில் வியப்பில்லைதான்!

ஆகவேதான், 'நீ இருக்க அச்சமில்லை' என்ற போக்கில் வாழ்கிறார்கள்! வாழ்கிறோம்!!

இத்தேசிய இனச் சிக்கல் போன்றவற்றைத் தீர்க்க, நமக்குள் கூடி முயல்தல் வேண்டும். வெறும் வாயை மெல்லுதல் வேண்டாம். உண்மை நிலைமைகளை எடுத்துப் பேசி விடிவு காணுதல் வேண்டும்.

தமிழினச் சிக்கலைத் தமிழின மக்கள் தீர்த்துக் கொள்வார்கள். அவர்களுக்காகத் 'தேவன் எவனும்' வானிலிருந்து 'மண்ணிற்கு இறங்கி வருவான்' என்று ஏமாற்றுதல் ஆகாது!

அறிவும், வாய்ப்பும் உள்ளவர் உண்மைகளை ஒளித்தல் கூடாது. எந்த மாயையும் நம் சிக்கல்களைத் தீர்ப்பதில்லை. அப்படிப்பட்ட மாயைகளில் ஒன்று 'பிரிவினை அச்சம்'.

எனவே, பரந்துள்ள மக்களின் பொதுவுணர்ச்சியை வளர்த்தெடுத்துப் புதிய மாற்றத்திற்கு முயலுங்கள்!

சோவியத்து இளைஞன், பழம் விற்கும் கருப்பாயியையும் - ஓர் எளிய நிகழ்ச்சியையும் மறவாமல் பல ஆண்டாகியும் நினைவு கூர்கிறான்! வியப்படைகிறோம் ...நாம்! 'பெரிய நிகழ்ச்சியையும்', நெருக்கடியையும் அன்றன்றே மறந்து போகின்றோம்! அடுத்த வேளை சோற்றுக் கவலையே பெருங் கவலையாகிவிடும் நமக்கு.

இந்த அவலம் ஒருபால் கிடக்க, அக் கூட்டத்தில், 'சக்தி கோதண்டம்' சோவியத்து போய்வந்ததை நினைவு கூர்ந்தனர். அவ்வம்மையார், பிறரைப்போல், இலெனின் கல்லறை - செஞ்சதுக்கம் காணும் விருப்பந் தெரிவிக்காமல், 'சிறைப்பட்ட ஒருவனைச் சிறையிலேயே சந்தித்துப் பேச விருப்பம் தெரிவித்தாராம். அவ்விருப்பத்தைக் கேட்ட சோவியத்துக்காரர், "நீங்கள் ஒரு தென்னிந்தியரா?" எனக் கேட்டிருக்கிறார்! இவர் "குமரி முனைக் காரி", எனத் தம்மை அறிமுகம் செய்துள்ளார். 'அறிவான வினா' தென்னாட்டவரிடமே எழும் என அச் சோவியத்துக்காரர் எதிர் பார்ப்பது இயல்புதான்!" என்றார்.

ஆனால், நாம் நம் தேசிய இனப் பெருமையைப் கேட்டறிய, அயல்நாடு போய்ப் பயனில்லை. நாம் இழந்த பெருமையை மீட்கவேண்டும்! நாம் எப்படி உள்ளோம்?

தேசிய உணர்வைச் சாம்பவிட்டுத், தேசியப்பண்பாட்டை வளர்ப்போம் என்பதா? 'இந்தியா'...'தமிழ் நாடு',...'அசாம்',...'பீகார்',—'பஞ்சாப்' கலவை சேரவில்லை! காரணம் இவற்றின் தேசியம் புறக்கணிக்கப் பட்டது. சாரமின்றிக் கட்டிடம் எழுவதில்லை. நம் பண்பாடு பற்றிய தெளிவு நமக்கில்லை.

எனவே, மாந்தநேயப் பண்பாட்டுடன் கலந்து நிற்க முடியவில்லை. ஆகவே; வெறும் கலவைப்பேச்சை கைகூடாது! இனப் பண்பாடு பேணுவதால்,..மாந்த நேயம் குலைவதில்லை! இனப் பண்பாட்டைச் சிதைப்பதால் மாந்த நேயம் நிலை குலைகிறது!

ஆகவே, நாம்...உறவை வலுவாக்கிட நம் பண்பாட்டின் எல்லையை உணர்வோம், கற்போம். பிறபண்பாட்டின் ஒருமையை ஏற்போம்! வெல்வோம்!

- பறம்பை அறிவன்.

(முன்னிதழ்த் தொடர்ச்சி) (தொடர்-3)

தமிழீழ அரசியலில் அகப்புற அழுத்தங்கள்!

— "குண" —

(2) அமெரிக்க-பிரித்தானிய-சீன-இசுரேலிய சியோனிய அணி :

அமெரிக்காவின் முதலாளிய அடிவருடி செல்லப்பிள்ளை செயவர்த்தன, அமெரிக்கா போட்டுள்ள முதலீடுகள் இலங்கையில் அச்சுறுத்தலுக்கு உள்ளாகக் கூடாதென்பது அமெரிக்காவின் பெருங் கவலை. திருகோணமலை கடல் தளம் வேறு போர்த் தந்திரச் சிறப்பு மிக்கது. அங்கு காலூன்றிவிட்டால் இந்து மாகடலையே தன் கட்டுப்பாட்டிற்குள் வைத்துக் கொள்ளலாமென்னும் படையியல் நாட்டம் வேறு அமெரிக்காவைச் செயவர்த்தனவுக்கு முட்டுக்கொடுக்க செய்கின்றது. இதனால் சிங்களர் மீது மட்டும் அமெரிக்க வல்லரசுக்கு ஒரு தனிக் காதல் என்று சொல்லி விட முடியாது. தமிழீழ மக்களின் மீது அதற்கு வெறுப்பு என்றும் கூறலாகாது. ஆயினும், தமிழீழம் கேட்பவர்கள் இலங்கையென்னும் ஓர் அங்காடியை இரு கூறாக்கி விடுவரோ என்ற அச்சமும், தமிழீழ விடுதலை அமைப்புகள் பொதுவாக மார்க்சியத்தை கொள்கையாகக் கொண்டுள்ளதும் அமெரிக்காவிற்கு பெரும் நடுக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. ஆயினும், சிங்கள இனவெறியின் கொலைவெறித் தாண்டவம் எங்குக்கொண்டு போகுமென்னும் பட்டறிவும், வழியறிவும் அமெரிக்காவிற்கு உண்டு. இந்தோசீனத்தின் பட்டறிவு ஒன்றே போதுமே! அதனால், ஒரு பக்கம் இலங்கை அரசுக்குப்புதிய புதிய துமுக்கி வகைகளையும்,வேட்டெஃகங்களையும், பணத்தையும் அதுகொடுத்துதவினாலும், பேச்சுகளை நடத்தி இலங்கையில் இனச் சிக்கலுக்கு ஒரு முதலாளியப் போலித் தீர்வைக் காணவேண்டிய தேவையையும், அஃது ஏற்றுக் கொள்கின்றது. அதனால் தாம் இதுகாறும் உருசியாவுடன் சேர்ந்து உலகளவில் கடைப்பிடித்து வருகின்ற "செல்வாக்கு மண்டலங்கள்" (Spheres of Influence) என்னும் கொள்கையைத் தழுவி, இந்த இந்துமாகடலில் இந்தியாவின் "சாய்காலை" ஒரு நடப்புண்மையாக அஃது ஏற்றுக் கொண்டுள்ளது கண்கூடு. இலங்கையை ஆட்டுவித்து, ஆட வைக்கின்ற பெருமானாக அமெரிக்கா இருப்பதனால், தமிழீழ மக்களின் பகைவரின் பகைவனாக அஃதுஇருக்கின்றது.

பிரித்தானிய வல்லரசு செய்த சூழ்நிலையின் வினையே, இன்று தமிழீழத் தமிழரின் தற்காப்புப் போருக்கான வரலாற்றுப் பின்புலமாக இருக்கின்றது. ஆயினும், இன்றைய பிரித்தானிய வல்லரசின் நலன்களெல்லாம் இலங்கையில் இருக்கின்ற தன்னுடைய முதலீடுகளைப் பார்த்துக் கொள்வதேயாகும். அதைக் கருதி மாற்றம் வேண்டா இந்தக் கிழட்டு வல்லரசு, தமிழீழத்தில் பொதுவுடைமையரின் புரட்சி வந்து விடுமோவென அஞ்சுவதே, அது செயவர்த்தனவின் இனவெறி அரசை ஆதரிப்பதற்கான கரணியம்.

இலங்கையில் முன்பிருந்த திருவாட்டி பண்டாரநாயகா ஆட்சியை எதிர்த்துப் படையெழுச்சியில் இறங்கிய சிங்கள இளைஞர்களைக் கொன்று குவித்த போது, சீனம் இலங்கை அரசை ஆதரித்தது. இன்று தமிழர்களையும் படுகொலை செய்கையில், செயவர்த்தனவின் பக்கம் நின்று, கப்பலும், துமுக்கியும் கொடுத்துதவுகின்றது. இதற்கான காரணம் அந்த இழவெடுத்த மூன்றுலகக் கோட்பாடுதான். சீனத்தின் தன்னல வெளியுறவுக் கொள்கைதான். அதுபோக, இந்தியத் துணை வல்லரசின் மீது அதற்கு இயல்பாக இருக்கின்ற ஐயுறவும் இலைமறைக் காயாக இருக்கின்ற பகையும் மற்றொரு காரணம். இதேபோன்று, உருசிய நிழல் இலங்கைத் தீவின் மீது பட்டுவிட்டதாகக் கருதியும் அரண்டு, தமிழீழப் பாட்டாளிய வகுப்பு நலன்களைக் காட்டிக் கொடுப்பதுடன் நில்லாது தமிழீழ மக்கள் அனைவரையுமே பகைத்துக் கொள்கின்றது. அத்தோடு, தான் கூடிக்குலாவி நிற்கின்ற அமெரிக்க வல்லரசின் அடிவருடி அந்த செயவர்த்தன. இதனால் தமிழீழப் புரட்சியின் எதிரணியில் சீனமும் நிற்கிறது.

அடுத்து, இசுரேல் என்னும் அமெரிக்க ஒட்டுண்ணி, வேறு தமிழீழப் புரட்சியை நடத்த தன்னுடைய உளவுத்துறை ஆட்களை விடுத்துச் சிங்கள இனவெறிக்கு கரந்தடி (கொரில்லா)ப்போர் எதிர்ப்புப் பயிற்சியைக் கொடுக்கின்றது. இதற்குப் பெரியதொரு பொருளியல் நலன் இலங்கையில் இல்லை. ஆயினும், அமெரிக்க ஏவலின்படி அப் பணியை அது செய்கின்றது. தன்னுடைய உயிர் எதிரியான பாலத்தீன விடுதலை அமைப்புகள் தமிழீழப் புரட்சிக்கு காட்டுகின்ற கனிவும், ஆதரவும் கண்டு ஓர் ஏட்டிக்குப் போட்டி நிலையை வேறு இந்த யூத இன வெறியைத் தழுவிய இசுரேல் எடுத்துள்ளது. இனத்தோடு இனமென்பது போல் மத இனவெறியோடு மத இனவெறிதான் கைக்கோத்துகொண்டு நிற்கிறது.

(3) உருசிய வல்லரசு :

அமெரிக்க வல்லரசு போகின்ற இடங்களிலெல்லாம் உருசியாவும், நிழல்போல் தொடரும். உருசியா போகிற இடங்களிலெல்லாம் அமெரிக்கா பின்தொடரும். இதுதான் பெரு வல்லரசு அரசியல். தேசிய விடுதலை இயக்கங்களின் உயிர்த்தோழன் உருசியா வென்னும் காலம் என்றோ மலையேறிவிட்டது. தமிழீழத்தைச் சேர்ந்த சில விடுதலை அமைப்புகள் செய்வதைப்போல் உருசியாவிடம் கெஞ்சிக் கெஞ்சி உறவாடினாலும் நேரடி உதவியென்பதை உருசியா இதுவரை செய்தபாடில்லை. ஒரு செய்தி அறிக்கையை விட்டதோடு சரி. அமெரிக்காவைப் போன்றே, "இந்தியாவின் செல்வாக்கு மண்டலத்துக்குள்" இலங்கை அரசியலை மறைமுகமாக உரிமையாக்கிவிட்டே, கைக் கட்டிப் பார்த்துக் கொண்டிருக்கிறது இந்த உருசியா. இந்தியாவின் பார்வையின் ஊடேதான் தமிழீழச் சிக்கலை, தான் பார்ப்பதாக விடுதலை அமைப்புகளிடம் இது பச்சையாகவே சொல்கின்றது. திருகோணமலைக் கடற் தளத்தின்மீது இதற்கும் ஒரு கண்ணுண்டு. தமிழீழச் சிக்கலில் இதனுடைய ஈடுபாடு பெருகுவது, அமெரிக்க ஈடுபாடு பெருகுவதையே பொறுத்துள்ளது. அவ்வாறு அது தீவிரமாக இலங்கையில் தலை போடுகையில், தமிழீழ விடுதலை அமைப்புகளுக்கு இடையிலான விரிசல்கள் தான் பெருகும். அதற்கான அறிகுறிகளும் தென்படத் தொடங்கிவிட்டன.

(தொடரும்)

வாங்கி விட்டீர்களா?

பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் புதிய வெளியீடுகள் விற்பனைக்கு அணியமாகவுள்ளன.

1. பாவேந்தர் பாரதிதாசன்	14—00
2. இனம் ஒன்று படவேண்டும் என்பது எதற்கு?	1—00
3. வாழ்வியல் முப்பது (மறு பதிப்பு)	1—50
4. சாதித் தீமைகளும், அதை ஒழிக்கும் திட்டமும்	0—50
5. ஆரியப் பார்ப்பனரின் அளவிறந்த கொட்டங்கள்	2—25
6. தன்னுணர்வு	1—50
7. இலக்கியத் துறையில், தமிழ் வளர்ச்சிக்குரியஆக்கப்பணிகள்	1—50

தொடர்பு கொள்ள:

மே/பா, தென்மொழி, சென்னை-5.

தமிழ்நிலம் கருத்துகளை அங்கங்கே பரப்புங்கள்!

தமிழீழ விடுதலைப் போராட்டமும் கலிசுத்தான் விடுதலைப் போராட்டமும்!

(ஓர் ஒப்பு நோக்கு)

- மலர்மாறன் -

இலங்கைத் தீவிலே வாழும் தமிழர்கள் தங்களது ஈழத் தமிழ்நாடு விடுதலையடைய வேண்டுமென்று போராடி வருகின்றனர்.

அமைதி முறையில் அதை அடைய அமிர்தலிங்கம் போன்றோர் போராடுகின்றனர் - புரட்சி முறையில் ஈழத்தமிழகத்தை அமைக்க ஆயிரக்கணக்கான விடுதலைப்புலிகள் கருவிகளேந்திப் போராடிக் கொண்டிருக்கின்றனர்.

பஞ்சாப் மாநிலத்தில் கலிசுத்தான் எனும் விடுதலைபெற்ற நாட்டை அமைக்க வேண்டுமென்று, சீக்கிய தீவிரக்கொள்கையர் கருவியேந்திப் போராடுகின்றனர்.

சீக்கிய தீவிரக்கொள்கையர், வன்முறையாளர்கள் (பயங்கரவாதிகள்). அதேபோன்ற வன்முறையாளர்கள்தாம் தமிழ் ஈழ விடுதலைப் போராளிகளும் என்று கூறி உலகத்தைக் குழப்பிக்கொண்டிருக்கின்றார் செயவர்த்தன — அதே குழப்பக்கருத்தைத் தங்களைத் தமிழர்கள் என்றுக் கூறிக்கொண்டே தமிழர்களைக் காட்டிக் கொடுத்துக் கொண்டிருக்கும் கும்பலும், தமிழகத்தில் கருத்துப்பரப்புதல் செய்து தமிழீழமக்களை ஏமாற்றிக்கொண்டிருக்கின்றது.

அந்தக் குழப்பக் கருத்துகளில் குழம்பிய தமிழர்கள் ஈழத்திலே படுகொலைச் செய்யப்பட்டுக் கொண்டிருக்கும் தமிழினத்தைக் காப்பாற்ற என்ன செய்வது என்று புரியாது தவித்துக் கொண்டிருக்கின்றனர்.

ஈழத்தமிழர் விடுதலைச் சிக்கல்களும், கலிசுத்தான் சிக்கல்களும் ஒரு தன்மை உள்ளவையா?

இல்லை......! இல்லவே இல்லை...........!!

இரண்டிற்கும் இடையே உள்ள வேறுபாடுகள், மலைக்கும் மடுவுக்கும் இடையே உள்ள வேறுபாடுகள் போன்றவையாகும்.

இலங்கையிலுள்ள ஈழத்தமிழர்களின் நிலை என்ன? இந்தியாவிலுள்ள சீக்கியர்களின் நிலை என்ன?

ஈழத்தமிழர் விடுதலைச் சிக்கல் ஏன் எழுந்துள்ளது? அத்தகைய சிக்கல்கள் கலிசுத்தான் கேட்கும சீக்கியர்களுக்கு உண்டா?

இந்தக் கேள்விகளுக்குரிய விரிவான விளக்கத்தை கீழ்க்காணுமாறு 15 நிலைகளாக ஒப்பிட்டுப் பார்க்கலாம்.

1) இந்தியக் கூட்டாட்சியில் சீக்கியர்களுக்கு பஞ்சாப் என்றொரு தனி மொழிவழி மாநிலம் அமைத்துக் கொடுக்கப்பட்டிருக்கின்றது. பஞ்சாப் மாநில அரசு சீக்கியர்களைக் காக்கவும், அவர்களின் நலன்களைப் பேணவும் இயங்கிக் கொண்டிருக்கிறது.

இலங்கைத் தீவிலே சிங்களவர்கள், தமிழர்கள் என்ற இரண்டு இன மக்கள் இருந்தும், தமிழர்களுக்கு என்று ஒரு மாநிலமும் அமைந்துக் கொடுக்கப்படவில்லை. ஈழத்தமிழர்களுக்கு என்று ஒரு மாநில அரசு இல்லாததால் ஈழத்தமிழர்களைக் காப்பாற்றவும் அவர்களின் நலன்களைப் பேணவும் எந்த ஓர் அமைப்பும் இல்லாமல் போய்விட்டது

2) பஞ்சாப் மாநில அரசை ஆளும் அதிகாரம், பஞ்சாப் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் கையில் ஒப்படைக்கப்படுகின்றது. ஆகவே உள்நாட்டில் தங்களைக் காப்பாற்றிக்கொள்ள சீக்கியர்கள் காவல்துறைப் படையை தாங்களே அமைத்து, ஆளுமை செய்து வருகின்றனர்.

இலங்கையிலே தமிழர்களுக்கு என்று ஒரு மாநில அரசு இல்லை. அதனல் ஈழத்தமிழர்களிடம் தங்களைக் காப்பாற்றிக்கொள்ளும் அதிகாரம் இல்லை. தங்களைப் பாதுகாத்துக்கொள்ள ஈழத்தமிழர்கள் காவல்துறைப் படையை அமைக்கவோ ஆளுமை செய்யவோ முடியாது ஈழத்தமிழர் பகுதிகளின் பாதுகாப்புக்காக, இலங்கை அரசு சிங்களவர்களைக் காவலர்களாக அமைத்து ஆளுமைசெய்து கொண்டு இருக்கின்றது.

3) பஞ்சாப் மாநிலத்திலுள்ள காவல்துறைப் படைக்கு 100-க்கு 95 பேர்களுக்கு மேல் சீக்கியர்களாகவே அமர்த்தப்படுகின்றனர். ஆகவே அவர்களிடம் தங்கள் இனத்தைக் காப்பாற்றும் உணர்வு இயற்கையாகவே அமைந்து விடுகின்றது.

இலங்கையிலே தமிழ்ப் பகுதிகளில் 100-க்கு 95 பேர் சிங்களவர்கள்தாம் காவலர்களாக அமர்த்தப்பட்டுள்ளனர். அந்தச் சிங்களக் காவலர்களிடம் தமிழர்களைக் காப்பாற்றும் உணர்வு கொஞ்சம்கூட கிடையாது. மாறாகத் தமிழர்களைக் கொடுமைப் படுத்தும் உணர்வுதான் அதிகமாக உள்ளது.

4) பஞ்சாப் மாநிலப் பகுதிகளுக்குச் சென்று யாராவது பஞ்சாபியர்களைத் துன்புறுத்தினல் அவர்கள் மீது நடவடிக்கை எடுத்துச் சிறையிலே பூட்டிவிட ஏற்பாடு செய்வார்கள், பஞ்சாப் காவலர் படையினர்.

ஈழத்தமிழர் பகுதிகளுக்குச் சென்று சிங்களவர்கள் தமிழர்களைக் கொடுமைபடுத்தினல், அதை ஏன் என்றுகூட கேட்கமாட்டார்கள். தமிழர் பகுதிகளைக் காப்பாற்றுவதற்காக அமர்த்தப்பட்டிருக்கும் சிங்களக் காவலர்கள்.

5) பஞ்சாப் மாநிலத்தில் உள்ள சீக்கியப் பெண்களை வேறு யாராவது பலாத்காரமாக கற்பழித்தால், அதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கமாட்டார்கள், பஞ்சாப் காவலர்கள் அவர்களைப் பிடித்து செம்மையாக உதைத்துச் சிறையில் பூட்டித் தக்க தண்டனைக் கிடைக்க ஏற்பாடு செய்வார்கள். பஞ்சாபில் மட்டுமன்று, இந்தியா முழுவதிலும் பஞ்சாபியர்கள் மானத்தோடு வாழ முழு பாதுகாப்பும் கொடுக்கப்பட்டுள்ளது

இலங்கையில், தமிழ்ப் பெண்களைச் சிங்களக் குண்டர்கள் வலுக்கட்டாயமாக இழுத்துக்கொண்டு வந்து கற்பழித்தால் அதை ஏன் என்று கேட்பதில்லை. தமிழர்களைக் காப்பதற்காக அமர்த்தப்பட்டிருக்கும் சிங்களக் காவலர்கள் அந்தக் குண்டர்கள் மீது முறையீடுகளைக் கொடுத்தால்கூட வழக்குகளைப் பதிவு செய்வதில்லை சிங்களக் காவலர்கள். சிங்களக் குண்டர்கள் மட்டுமன்று, சிங்களப் படைத்துறையினர், காவலர்கள், புத்த குருமார்கள் ஆகிய எல்லோருமே தங்கள் விருப்பம்போல் தமிழ்ப் பெண்களை இழுத்துக்கொண்டு வந்து வலுக்கட்டாயமாகக் கற்பழித்துக் கொன்று வீசி எறிந்துவிட்டுச் செல்கின்றனர். ஈழத் தமிழ்ப் பெண்கள் மானத்தோடு வாழமுடியாத அவலநிலையில் தத்தளித்துக் கொண்டிருக்கின்றனர்.

6) இந்தியப் படைத் துறையில் சீக்கியர்கள் தாம் மிகப்பெரிய அளவில் அமர்த்தப்பட்டுள்ளனர். இந்திய மக்கள் தொகையில் சீக்கியர்கள் ஏறத்தாழ 8 விழுக்காடாக உள்ளனர். ஆனல் இந்தியப் படைத் துறையில் சீக்கியர்களின் எண்ணிக்கை ஏறத்தாழ 20 விழுக்காடாக உள்ளது.

இலங்கை மக்கள் தொகையில் ஈழத் தமிழர்கள் ஏறத்தாழ 25 விழுக்காட்டினராக உள்ளனர். ஆனல், இலங்கைப் படைத் துறையில் தமிழர்கள் 5 விழுக்காட்டுப் பேரே கூட அமர்த்தப்படுவதில்லை.

7) பொருளியல் முன்னேற்றத்தில் பஞ்சாப் மாநிலம்தான் இந்தியாவில் முதன்மையாக உள்ளது இந்தியாவில் சராசரியாக வறுமைக் கோட்டிற்குக் கீழே இருப்பவர்களின் எண்ணிக்கை 50 விழுக்காடாக இருக்கின்றது ஆனல் பஞ்சாப் மாநிலத்தில் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்களின் எண்ணிக்கை 15 விழுக்காடுதான். அதைக்கூட இன்னும் சில ஆண்டுகளில் ஒழித்துவிடத் திட்டமிட்டுச் செயலாற்றிக் கொண்டிருக்கின்றது பஞ்சாப் அரசு. வறுமையே இல்லாத மாநிலமாகச் சீக்கியர்களின் மாநிலத்தை ஆக்கும்பணியில் வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கின்றது அந்த மாநில அரசு அதற்கான உதவிகளை இந்திய அரசும் செய்துகொண்டிருக்கின்றது

இலங்கையில் ஈழத் தமிழர் பகுதிகள் பொருளியலில் மிகவும் பின்தங்கிய நிலையில் வைக்கப்பட்டுள்ளன. ஈழத்தமிழர் பகுதிகளுக்குத் தனி மாநில அரசு இல்லாததால், அவர்கள் தங்கள் பொருளியலை வளர்த்துக்கொள்ளத் திட்டமிட்டுச் செயலாற்ற வழியில்லை இலங்கை அரசு கிட்டத்தட்ட எல்லாப் பொருளியல் மேம்பாட்டுத் திட்டங்களையும் சிங்களவர்கள் பகுதிகளிலேயே நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றது. பெயருக்கு ஒன்றிரண்டு திட்டங்களை ஈழத்தமிழர் பகுதிகளில் நிறைவேற்ற இசைவளித்திருந்தார்கள்-அவற்றைக்கூட இப்போது செயவர்த்தன நிறுத்திவிட்டார். அந்தப் பணத்தைப் படைத்துறைக்காகச் செலவிட முடிவு செய்துள்ளார். ஈழத்தமிழர்கள் வறுமையின் பிடியில் தள்ளப்பட்டுள்ளனர்.

8) பஞ்சாப் மாநிலத்தில் சீக்கியவர்களின் மொழி ஆட்சி மொழியாக இருக்கின்றது. இந்தியக் கூட்டாட்சியில் சீக்கியவர்களின் மொழி தேசிய மொழியாக ஏற்கபட்டு அதன் வளர்ச்சிக்கு இந்திய அரசு உதவி செய்து வருகின்றது.

இலங்கையில் சிங்களத்தோடு, தமிழும் தேசிய மொழியாக வெள்ளைக்காரர்களின் ஆட்சிக் காலத்தில் ஆக்கப்பட்டிருந்தது இலங்கை விடுதலையடைந்த பின்னர், படிப்படியாகத் தமிழ்மொழி தேசியமொழி என்ற நிலையிலிருந்து கீழே தள்ளப்பட்டுவிட்டது. இப்போது சிங்களம் மட்டும்தான் தேசிய மொழியாக ஆக்கப்பட்டுள்ளது. தமிழிற்கு உரிய இடத்தையும் வாய்ப்பையும் கொடுக்காமல், அதை அழித்துவிடும் எண்ணத்தில் சிங்கள அரசு செயல்பட்டு வருகின்றது (தொடரும்)

இராசீவ் காந்தி அரசு ஒரு கண்ணோட்டம்!

- வன்னிகேள்வன் -

நடுவணரசைப் பொறுத்தவரை நேரு, இந்திரா காந்தி ஆகியோர் ஆண்டபோதும் சரி; இப்பொழுது இராசிவ்காந்தி அமைச்சராக இருக்கும்போதும் சரி; இராசீவுக்குப் பிறகு ஒரு மண்ணாங்கட்டி அதிகாரத்திற்கு வந்தாலும்சரி? நோக்கம் என்னவோ ஒன்றாகத்தான் இருக்கும். கோயில் மாறியது; படிமம் மாறியது; பூசை என்னமோ ஒன்றுதான் என்பதுபோல் இந்திரா போய் இராசீவ் வந்திருக்கிறார்.

பதவி ஏற்றதுமே இராசீவ் தமது சூழ்ச்சி வலையை விரிக்கத் தொடங்கிவிட்டார். அவர் அறிவித்த பதின் இனத் (பத்து அம்ச) திட்டங்களைக் கூர்ந்து நோக்கினலே அவ்வுண்மை புரிந்துவிடும். அதில் ஐந்தாவது திட்டத்தைப் பாருங்கள்.

'முடிவு எடுப்பதை விரைவுபடுத்த நெறிகளும் வழிமுறைகளும் எளிதாக்கப்பட்டு மாற்றம் செய்யப்படும். வழிமுறைகளைவிட முடிவிற்கு முகாமை அளிக்கப்படும்'.

மேலோட்டமாகப் பார்த்தால் ஏதோ ஆட்சிச் செயல் முறையில் சீர்திருத்தம் செய்யப் பயன்படும் திட்டம்போல் கவர்ச்சியாகத் தெரியும். ஆனல் அது, மக்களை அடக்கி உரிமைகளைப் பறிக்கும் நஞ்சு தோய்ந்த திட்டம். தடிப்பெழுத்திலுள்ள இறுதிவரி அவ்வுண்மையை மறைமுகமாக உணர்த்துகிறது. இன்று வன்முறைத் தடைச்சட்ட (பயங்கர வாதத் தடைச்சட்டம்) என்ற போர்வை போர்த்திக் கொண்டு வந்துவிட்டது.

வன்முறைத் தடைச்சட்டம் அறிவிக்கப்பட்டவுடனே அதற்கு எதிர்ப்புகள் கிளம்பியுள்ளன.

'குமுகாயத்தில் நம்பிக்கையை உருவாக்க வேண்டும் என்கிற நோக்கத்திற்காகவே இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருப்பதுபோல் வெளியில் தெரியும்.......மேலும் 'இந்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் போது, அதைத் தவருகப் பயன்படுத்தக்கூடிய வாய்ப்பும் உள்ளது' என்று சரன்சிங் கூறியுள்ளது முற்றிலும் உண்மையே. மேற்கு வங்க முதல்வர் சோதிபாசும், 'தற்போதுள்ள அரசியல் சட்ட நெறிமுறைகளே போதுமானதாக இருக்கும் போது, வன்முறைத் தடைச் சட்டம் தேவையில்லாதது ஆகும்?........புதிய சட்டம் கொண்டு வருவது மக்களின் அடிப்படை உரிமைகளையும் கடமைகளையும் தடைசெய்வது போலாகிவிடும்' என்று தெளிவாகவே கூறுகிறார்.

அவர் கூறியது போல் மக்களின் அடிப்படை உரிமைகளை நசுக்கும் கரவான மற்ருெரு திட்டம்-தான் பதின் இனத்திட்டத்தில் எட்டாவது திட்டம்.

'புதிய தேசியக் கல்விக்கொள்கை திட்டமிடப்படுகிறது' என்பதே அது. இந்தி பேசுவோர் அல்லாத மாநிலங்களை ஒட்டுமொத்தமாக அடிமைப்படுத்தவே இக்கொடிய திட்டம் அறிவிக்கப்பட்டிருக்கிறது. இத்திட்டம் ஏதோ திடீர் அறிவிப்பு அன்று. வலிவான அடிப்படையில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட இருக்கிறது. அதற்குத் தக்கபடி சட்டங்களை நடுவணரசு மாற்றியமைத்துக்கொள்ளும். (அதன் முதற்படியே வன்முறைத் தடைச் சட்டம்.)

தேசிய அளவில் புதிய கல்விக் கொள்கை என்பது இந்தித் திணிப்பின் புதிய ஆனல் வலிய வடிவமாகும். இந்த உண்மையைக் குடியரசுத் தலைவர் செயில்சிங், பஞ்சாப் பல்கலைக் கழகத்தின் 37-ஆவது பட்டமளிப்பு விழாவில் ஆற்றிய சிறப்புரையில் நாம் தெளிந்துகொள்ளலாம்.

"இந்தி, தேசிய மொழியாகும் வகையில் விரைவாக வளர்க்கவேண்டும். அயல்நாடுகள் அவரவர் மொழியின்மூலம் ஆக்கங்களை (சாதனைகளை) நிகழ்த்தி வரும்பொழுது, இந்தியா மட்டும் ஆங்கிலத்திற்குப் பகரமாக இந்தியைப் பயன்படுத்தாமல் இருப்பது வியப்பாக உள்ளது. மக்களை இந்திய மயமாக்கும் வண்ணம் தேசிய அளவில் புதிய கல்விக் கொள்கையை அறிமுகப்படுத்த அரசு எண்ணியிருக்கிறது"

இவரது கருத்தை ஒட்டியே நடுவண் கல்வியமைச்சர் கெ. சி. பந்த், நாட்டிலுள்ள அனைத்துப்

(தொடர்ச்சி 6-ஆம் பக்கம்)

கருப்புச் சட்டங்களே இந்தியாவை ஆள்கின்றன!

இராசீவ காந்தி அரசு.. கண்ணோட்டம்!

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பள்ளிகளிலும், இந்தி கற்பிக்கப்பட வேண்டும் என நடுவணரசு விரும்புவதாகத் தெரிவித்து, மேலும் விளக்குகிறார் :

“நாடெங்கும் ஒரே கல்விக் கொள்கையைக் கடைப்பிடிக்க நடுவணரசு விரும்புகிறது. ஆகவே, மாநிலங்களில் உள்ள கல்வித் துறைகள் மும்மொழித் திட்டத்தைக் கடைப்பிடிக்குமாறு நடுவணரசு கேட்டுக்கொள்கிறது. கல்விக் கொள்கைகளை உருவாக்குவதில் மாநில அரசுக்குப் பெரும்பங்கு இருப்பதால் மும்மொழித்திட்டம் செயல்படாது போகிறது’.

ஆக மாநில அரசின் அந்தப் பெரும்பங்கையும் பறித்துக் கொள்ளத் திட்டம் தீட்டிவிட்டார்கள். அந்த உண்மையை ஓரளவு வெளிப்படையாகவே கே. சி. பந்த் தெரிவிக்கிறார். கல்வித் துறை வல்லுநர்களின் கருத்துரைகளுக்கும், பரிந்துரைகளுக்கும் முரண்படாமல் புதிய கல்விக்கொள்கை இருக்கும் என்று அவர் கூறுவது இஃது இந்தித் திணிப்பன்று என்று பொது மக்கள் நம்பவேண்டும் என்பதற்குத்தான். மேலும், “தனியர், அரசுத்துறை, குழுமத் தலைவர்கள், மாநில அரசுகள், ‘சர்வீசு கமிசன்’ தலைவர்கள் ஆகியோருடன் பேசி அவர்களை இதற்கு உடன்படச் செய்யவேண்டும். இஃதெல்லாம் சற்றுக் கடினமான செயல் என்றாலும், புதிய கல்விக் கொள்கை வெற்றியுடன் நடக்க அப்படிச் செய்வதுதான் ஒரே வழி” என்று கூறுகிறார். எனவே, புதிய கல்விக் கொள்கையை அனைத்து மாநிலங்களும் வேறு வழியின்றி விரும்பியோ விரும்பாமலோ ஏற்றேயாகவேண்டிய கட்டாயத்தை, நடுவணரசு ஏற்படுத்திவிடும். அதற்கேற்ப விருப்பம்போல் சட்டங்களை நடுவணரசு அமைத்துக்கொள்ளும். (இப்பொழுது வன்முறைத் தடைச்சட்டம் வந்திருக்கிறது)

இதற்கேற்பவே இராசீவ் காந்தியும் நடுவிலும் மாநிலத்திலும் ஒரே கட்சி ஆட்சிக்கு வருவதுதான் உகந்தது என்று கூறுகிறார். அனைத்து அதிகாரங்களையும் நடுவணரசிடமே குவித்து வைத்துக்கொள்ள வேண்டும் என்பதே அவர் நோக்கம். அப்படிச்செய்து கொண்டால், விருப்பம்போல் சட்டங்களைக் கொண்டு வரமுடியும். வழிமுறைகளை விட முடிவிற்கு முகாமையளிக்கப்படும் என்று இராசீவ் கூறியதன் நோக்கம் இப்பொழுது தெரிவாக விளங்குகிறதல்லவா ?

குசராத் மாநிலத்தில் வன்முறையைத் தடுக்க, மாநில அரசு தவறிவிட்டது என்று மாநிலங்களவையில், கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வரப்பட்ட போது, நடந்த தருக்கத்திற்கு, நடுவண் உள்துறை இணை அமைச்சர் இராம் துலாரி சின்கா கீழ்க்காணுமாறு விடையளிக்கிறார்:

“குசராத் மாநில அரசு, குடியரசு மரபுப்படி தேர்ந்தெடுக்கப்பட்டது. எனவே, அதனை நீக்கம் செய்துவிட்டுக் குடியரசுத் தலைவராட்சியைப் பிறப்பிப்பது என்ற பேச்சுக்கே இடமில்லை”.

ஆனால், அன்று ஆந்திராவில் இராம இராவ் ஆட்சியும், குடியரசு மரபுப்படிதானே தேர்ந்தெடுக்கப்பட்டது! ஆனால், அவரது ஆட்சியை அம்மையார் திட்டமிட்டுக் கவிழ்த்தாரே. அதற்கு இராம்துலாரி என்ன சொல்லப்போகிறார்? அம்மையாரின் அந்த அரம்பத்தனமான செயலை என்னதான் மூடிமறைத்தாலும், அஃது என் அப்பன் குதிருக்குள் இல்லை என்கிற கதைதான் என்பது எல்லார்க்கும் தெரியும்.

இனி, ஈழத் தமிழர் சிக்கலுக்கு வருவோம். செயவர்த்தனாவின் திட்டமிட்ட இனப் படுகொலையைக் கண்டிக்காமலும், உரிய நடவடிக்கை எடுக்காமலும் வேண்டுமென்றே சிக்கலை நீட்டிக்கிறது நடுவணரசு. கரணியம் ஈழத்தில் அழிக்கப்படுவது தமிழினம் என்பதால்தான்.

இலங்கையில் திரிகோணமலை இயற்கைத் துறைமுகம் அமெரிக்காவின் கமுக்கமான படைத்தமையமாக மாறி வருகிறது. கச்சத்தீவில் மொசாக், எசு.ஏ.எசு. கூலிப்படைகள் சிங்கள அரசால் குவிக்கப்பட்டுள்ளன. 1974-இல் ஏற்பட்ட கச்சத்தீவு உடன்பாட்டின்படி, அமைதி வழி (சமாதானம்), மதம் தொடர்பான செயல்களுக்கு அல்லாமல், வேறு செயல்களுக்குக் கச்சத்தீவு பயன்படுத்தப்பட்டால், உடன்பாடு புறக்கணிக்கப்படலாம் என்று உடன்பாட்டில் குறிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், இந்திய அரசு இதுவரை உடன்பாட்டைப் புறக்கணித்துக் கச்சத்தீவைக் கைப்பற்றவில்லை. இது செயவர்த்தனாவின் இனஅழிப்பு வேலைக்கு மறைமுக ஆதரவு தருவது போலவேயன்றி, வேறு வகையாக நினைக்க இயலாது. இராமேசுவரத்தில் கடல் பகுதியில் இந்தியப் போர்க் கப்பல்கள் பார்வையிடுவதெல்லாம் வெறும் கண் துடைப்பே. அவ்வுண்மையை நடைப்பயணம் மேற்கொண்ட சனார்த்தனம் அம்பலப்படுத்துகிறார்

“இராமேசுவரம் பகுதியில் இந்தியப் பாதுகாப்புப் பணி சரியில்லை. அங்கு இந்தியக் கடற்படைப் பாதுகாப்பு எப்படித் தெரியுமா? இராமேசுவரம் மீனவர்கள் மீன் பிடிக்கச் செல்வது இரவில். ஆனால், இந்தியக் கடற்படை பார்வையிட்டுச் சுற்றிவருவது பகலில். இஃது என்ன பாதுகாப்பு?

இராமேசுவரம் கடல் பகுதியில் இந்திய எல்லை இலங்கை எல்லை எதுவரை என்பதை இதுவரையில் மீனவர்களுக்குச் சரியாகச் சொல்லப்படவில்லை என்பது மறுக்கமுடியாத உண்மை. இந்திய வெளியுறவுத்துறை அதிகாரிகள் சிலர் இலங்கைச் சிக்கலைக் குழப்புகிறார்கள். இந்திய மீனவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் நடவடிக்கையை இந்திய அரசு எடுத்தாலே பாதிச் சிக்கல் தீரும். கச்சத்தீவை நாம் மீண்டும் பெறவேண்டும்”.

மேலும் அவர் கூறுகிறார் :— ‘கச்சத்தீவை நாம் இழந்துவிட்டோம் இனி இராமேசுவரத்தையும் இழக்கவேண்டுமோ என அஞ்சுகிறேன் இராமேசுவரம் அமைதியாக இருப்பதாகத் தொலைக்காட்சியில் காட்டுகிறார்கள் அது தவறு. அங்கே எந்தவகைத் தொழிலும் நடக்கவில்லை. மீனவர்கள் மீன் பிடிக்கச் செல்லவில்லை……’

நிலைமை இப்படியிருக்க இராசீவ்காந்தி உருசியா சென்று அங்குள்ள தலைவர்களிடமும் அரைத்த மாவையே அரைக்கிறார்.

‘இலங்கைத் தமிழர் சிக்கலுக்குத் தீர்வுகாண இலங்கை அரசு ஆக்கவழியிலான நடவடிக்கை எடுக்கவேண்டும். இச் சிக்கலுக்கு அரசு ஆக்கவழியிலான நடவடிக்கை எடுக்கவேண்டும். இச்சிக்கலுக்கு அரசியல் தீர்வுதான் காணவேண்டுமென்று இந்தியா வலியுறுத்துகிறது’.

இராசீவின் ஆரியத்தனமான வலக்காரப் பேச்சு எப்படியிருக்கிறது பார்த்தீர்களா ?

இந்த இலக்கணத்தில் நமீபியாவின் விடுதலையை ஏற்றுக்கொண்டு கூட்டுச்சேரா நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் மாநாட்டில் பேசிய இராசீவ் இறுதியாகக் கூறுகிறார் :—

‘நமீபியா மற்றும் தென் ஆப்பிரிக்காவில் வாழும் உடன் பிறப்புகளே! (சகோதர சகோதரிகளே !) நீங்கள் எங்களில் ஒருவராக இருக்கிறீர்கள், இன்றைக்கும் என்றைக்கும் நாங்கள் உங்களுடனே இருப்போம்’.

அப்படி என்றால், இராமேசுவர மீனவத்தமிழர்களும், ஈழத்தமிழர்களும் சிங்கள வெறியன்களால் கற்பைப் பறிகொடுத்துக் கண்ணீர் சிந்தும் தமிழ்ப் பெண்களும் இராசீவ் காந்தியைப் பொறுத்தவரை யார் என்பது தெரிகிறதல்லவா ?

நடுவணரசின் அரம்பத்தனமான போக்குக்கு, ஓரிரு எடுத்துக்காட்டுகளை இனிக் காண்போம்.

“அண்ணா !”

“என்ன தம்பி ?”

“சிங்களத்திலிருந்து வெளிவரும், ‘தி ஐலண்டு’ என்னும் ஆங்கில ஏடு, தனது ஆசிரிய உரையில், தமிழகத்தில் ஒரு கட்சி தோற்றதுபற்றி மகிழ்ச்சி தெரிவித்துள்ளதாமே !”

“ஆமாம் ”

“தமிழ் நாட்டில் உள்ள இலங்கைத் தமிழர் தீவிரவாதிகள் மீது நடவடிக்கை எடுக்க அந்தக் கட்சியின் தோல்வி, இராசீவ காந்தியின் கைகளை வலுப்படுத்தும் என்றும், அந்த ஏடு கூறியுள்ளதாமே !”

“ஆமாம்,”

“அப்படியானால், தமிழகத்தில் வெற்றி பெற்றுள்ள கட்சி, ஈழத் தமிழர்களின் இன்னாலைத் தீர்க்க ஒன்றும் செய்யாது என்றுதானே பொருளாகிறது ?”

“எனக்குத் தெரியாது தம்பி !”

- தமிழவேள்.

ஒரு மாநிலத்தின் மேல் அறமன்றத்தில் உள்ள நடுவர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் வெளிமாநிலத்தவராக இருக்கவேண்டும் என்ற நடுவணரசின் கொள்கை மிகவும் கொடுமையானதாகும். இக் கொள்கைப்படி ஒரு மாநில மேல அறமன்றத் தலைமை நடுவர்களை வேறொரு மாநிலத்திற்கு மாற்றுவது வேறுபாடுகளுக்கே வழிவகுக்கும். இது தொடர்பாகத் தில்லியில் மேல் அறமன்ற நடுவர்கள் தொடர்ந்த வழக்கில்,

‘அரசு தேர்ந்தெடுத்துத் தன் விருப்பப்படி அமர்த்தம் செய்யும் நடுவர்கள் அறமன்றங்களைத் தங்கள் ஆள்களைக் கொண்டு நிரப்புவார்கள். தங்களுக்கு இசைவான நடுவர்களிடம் ஒப்படைப்பதற்கு வழக்குகளை வேறு நடுவர்களுக்கு மாற்றக்கூடும்...... இத்தகைய சூழ்நிலையில் ‘ஆமாம் சாமி’களாக உயர் பொறுப்பில் உள்ள நடுவர் நயன்மைத் துறைக்கே எதிர்மறையாகிவிடுகிறார். அதனால் நயன்மைத் துறையே பாழாகும் நிலை ஏற்படுகிறது’ என்று கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், உத்தரப் பைதிர (பிரதேச) மாநிலத்தில் தலைமை நடுவர், 17 மேல் அறமன்ற நடுவர்களை அமர்த்தம் செய்து நிலைப்படுத்தமும் செய்துள்ளார். அதற்கு அதிகாரம் உண்டா என்று கேள்வியும் எழுப்பப்பட்டுள்ளது. அப்படி நிலைப்படுத்தம் செய்யப்பட்டுள்ள நடுவர்களனைவரும் பிராமணர்கள் என்பதைக் குறிப்பாக எடுத்துக்காட்ட வேண்டும். மற்றவர்கள் கூடுதல் நடுவர்களாக மட்டுமே அமர்த்தம் செய்யப்பட்டுள்ளார்கள்.

இனி, பேராயக்கட்சியின் நூற்றாண்டு விழாவைப் பற்றிச் சொல்லி இக் கட்டுரையை முடிப்போம். அவ்விழாவில் கலந்து கொள்ள இராசீவ் விடுத்த அழைப்பை எதிர்க்கட்சித் தலைவர்கள் யாரும் ஏற்றுக் கொள்ளவேயில்லை. அது தனிப்பட்ட ஒரு குடும்ப விழா என்று அவர்கள் தெளிவாகவே குறிப்பிட்டு விட்டார்கள். அவர்களின் கூற்றை உண்மை என்று பேராயக் கட்சியினர் மெய்ப்பித்தும் விட்டார்கள். அந்த நூற்றாண்டு விழாவில் நேரு, இந்திராகாந்தி ஆகியோரைத் தவிர மற்ற தலைவர்களைப் பற்றி அவர்கள் அக்கறை கொள்ளவேயில்லை. வேறொருவரின் படத்தைப் போட்டுக் காமராசர் என்று புன்மைத்தனமாகக் காட்டியிருக்கிறார்கள். அதற்கு ஒரு வருத்தம்கூட இராசீவ் தெரிவிக்கவில்லை. அவர்தாம் காமராசரை அவ்வளவு எளிதாக (காமராசர் ஒரு தமிழர் என்பதால்) நினைத்துவிட்டார் என்றால் தமிழ்நாட்டு மூப்பன்களுக்குக்கூடவா அடையாளம் தெரியாமல் போய்விட்டது? வெட்கக்கேடு! 0

“தென்மொழி”

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.
ஒவ்வொரு தமிழ்த்திங்களும் முதல்நாளன்று வெளிவரும்

	உள்நாடு	கொழும்பு	வெளிநாடு
ஆண்டுக்கட்டணம் :	15 உருபா	35 உருபா	45 உருபா
அரையாண்டுக் கட்டணம்:	8 ,,	18 ,,	25 ,,
தனியிதழ் :	1.25 ,,	3 ,,	4 ,,

ஓரிதழுக்கு உருபா 2-50 மேனி முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக்கேட்க,

தென்மொழி, 5: அருணசலத் தெரு, சென்னை - 5.

த.மு.க.வின் உயர்ந்த கொள்கைகள்:

- தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்.
- சாதியற்ற, மதவேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்.
- ஊழல்களும பூசல்களும் ஏமாற்றும் இல்லாத அரசியல்
- தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்.
- மனம், அறிவு, வாழ்க்கை -இவற்றை வளப்படுத்தவும் வலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி.
- பழந்தமிழ் மரபுக்கும் மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்.
- எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை.

கழக அருளாளர் : தென்மொழி நா. இளமாறன்.
கழக அருட்கொடையாளர்கள்:
தென்மொழி ந.முத்துக்குமரன், பல்லடம்மா.ஆறுமுகம்.

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையன்றும் வெளிவரும். [இதழ் எண்:59] பதிவு எண் TN/MS (C)/657

அனுப்புதல்: பெறுநர். நூல்-அஞ்சல்

தமிழ் நிலம்

5. அருணசலத் தெரு, திரு/திருவாட்டி
திருவல்லிக்கேணி
சென்னை—5

உறுப்பினர்
ஆண்டுக்கட்டணம் உரு. 36-00
அரையாண்டுக் கட்டணம் உரு. 18-00

ஆசிரியரும், வெளியிடுபவரும்: பாவலரேறு பெருஞ்சித்திரனார்,
அச்சிடுவோர்: தென்மொழி அச்சகம், 5, [illegible]